**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை**
**சிவகங்கை ஊராட்சி ஒன்றியம்**

**காலிப்பணியிட அறிவிப்பு**

சிவகங்கை மாவட்ட ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி அலகில், சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்தில் ஒன்றியத் தலைப்பின்கீழ் காலியாக உள்ள அலுவலக உதவியாளர் மற்றும் இரவுக் காவலர் பணியிடங்களை நிரப்பிட, சிவகங்கை ஊராட்சி ஒன்றிய ஆணையரால் 19.11.2019 அன்று வெளியிடப்பட்ட, விளம்பர அறிவிப்பு, ரத்து செய்யப்பட்டு, புதிதாக விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. பணி நியமனத்திற்கு, விண்ணப்பிக்கத் தேவையான தகுதிகள், காலிப்பணியிட விபரம், இன சுழற்சி ஒதுக்கீடு மற்றும் விண்ணப்பப் படிவம் ஆகியவை www.sivaganga.nic.in என்ற இணையதளத்தில் இடம் பெற்றுள்ளது. இப்பணியிடத்திற்கான விண்ணப்பங்களை 04.03.2020 தேதி முதல் மேற்படி இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் உரிய சான்றுகளின் நகல்களுடன் சிவகங்கை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு அலுவலக வேலை நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.45 மணி வரை நேரிலோ அல்லது சிவகங்கை ஊராட்சி ஒன்றியம், தொடர்வண்டி நிலைய சாலை, சிவகங்கை-630561 என்ற முகவரிக்கு பதிவஞ்சல் மூலமாகவோ 19.03.2020 அன்று மாலை 5.45 மணிக்குள் கிடைக்குமாறு அனுப்பி வைக்க வேண்டும்.

ஆணையாளர்,
ஊராட்சி ஒன்றியம்,
சிவகங்கை.

இணையதள அறிவிக்கை

ந.க.எண்.2345/அ1/2019 நாள்:04.03.2020

**ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை**
**சிவகங்கை ஊராட்சி ஒன்றியம்,**
**சிவகங்கை**

**இரவுக்காவலர் மற்றும் அலுவலக உதவியாளர் பணியிடங்களுக்கான நேரடி நியமன அறிவிக்கை**
**(Notification)**

சிவகங்கை மாவட்டம், சிவகங்கை ஊராட்சி ஒன்றியம், ஒன்றியத்தலைப்பின் கீழ் ஊதியம் வழங்கப்படும் பணியிடங்களில் காலியாக உள்ள 1(ஒன்று) அலுவலக உதவியாளர் மற்றும் 1(ஒன்று) இரவுக்காவலர் பணியிடங்களை நேரடி நியமனம் மூலம் நிரப்பிட கீழ்க்கண்ட விபரப்படியான, இனச்சுழற்சி மற்றும் ஒதுக்கீடு அடிப்படையில் தகுதியான நபர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

பணியிடம்: அலுவலக உதவியாளர்-ஒரு காலிப்பணியிடம்

| வ.எண் | பதவியின் பெயர் | காலியிடங்களின் எண்ணிக்கை | இனச்சுழற்சி (Rotation) | ஒதுக்கீடு |
|---|---|---|---|---|
| 1. | அலுவலக உதவியாளர் | 1 | பொது (General) | - |

**கல்வித்தகுதி மற்றும் தகுதி**

1.அலுவலக உதவியாளர் பணியிடத்திற்கு 8-ஆம் தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

2.சிறப்புத்தகுதி-மிதிவண்டி ஓட்டத்தெரிந்திருக்க வேண்டும்

பணியிடம்: இரவுக்காவலர்-ஒரு காலிப்பணியிடம்

| வ.எண் | பதவியின் பெயர் | காலியிடங்களின் எண்ணிக்கை | இனச்சுழற்சி (Rotation) | ஒதுக்கீடு |
|---|---|---|---|---|
| 1. | இரவுக்காவலர் | 1 | பொது (General) | - |

**கல்வித்தகுதி**

இரவுக்காவலர் தகுதி- எழுதப்படிக்க தெரிந்திருக்க வேண்டும்

| வயது | |
|---|---|
| இனம் | வயது(அகவை) |
| பொதுப்பிரிவினர் | விண்ணப்பிக்கும் நாளன்று 18 வயது பூர்த்தி அடைந்தும், 01.01.2020 அன்று 30 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும் |
| மிகவும் பிற்படுத்தப்பட்டோர்/ சீர்மரபினர்/ பிற்படுத்தப்பட்டோர் | விண்ணப்பிக்கும் நாளன்று 18 வயது பூர்த்தி அடைந்தும், 01.01.2020 அன்று 32 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும் |
| ஆதிதிராவிடர்/ பழங்குடியினர் | விண்ணப்பிக்கும் நாளன்று 18 வயது பூர்த்தி அடைந்தும், 01.01.2020 அன்று 35 வயதிற்கு மிகாமல் இருக்க வேண்டும் |
| | |
| ஊதியம் மற்றும் இதரப்படிகள் | |
| அடிப்படை ஊதியம் | ரூ.15700 (நிலை-1) |
| ஊதிய விகிதம் | ரூ.15700-50000 (நிலை -1) |
| இதரப்படிகள் | அரசு நிர்ணயம் செய்யும் படிகள் |
| | |
| விண்ணப்பப்படிவம் | |
| இப்பணியிடங்களுக்கான மாதிரி விண்ணப்ப படிவத்தினை www.sivaganga.tn.nic.in என்ற இணையதளத்தில் செய்து விண்ணப்பிக்கலாம் | |
| விண்ணப்பம் வந்து சேர வேண்டிய கடைசிநாள் | 19.03.2020 பிற்பகல் 5.45 மணி. |

விண்ணப்பங்கள் அனுப்பப்பட வேண்டிய முகவரி:

ஆணையாளர்/ வட்டார வளர்ச்சி அலுவலர் (வ.ஊ),
ஊராட்சி ஒன்றிய அலுவலகம், சிவகங்கை,சிவகங்கை மாவட்டம்,
அஞ்சல் எண்-630561

நிபந்தனைகள்:

1. சிவகங்கை மாவட்டத்தில் வசிப்பவராக இருக்க வேண்டும்.சிவகங்கை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
2. விண்ணப்பதாரர், கல்வித்தகுதி, சாதிச்சான்று, முன்னுரிமை சான்று ஆகியவைகளுக்கு ஆதாரம், கண்டிப்பாக இணைக்கப்பட வேண்டும்.
3. இன சுழற்சி, வயது மற்றும் கல்வித்தகுதியுள்ள நபர்களிடமிருந்து வரப்பெறும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும்.
4. இணையதளத்தில் பதிவிறக்கம் செய்யப்பட்ட விண்ணப்பத்தில் உள்ளவாறு விபரங்கள் முழுமையாக பூர்த்தி செய்து அனுப்பப்படவேண்டும். முழுமையாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் கண்டிப்பாக நிராகரிக்கப்படும்.
5. தகுதியில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
6. நேர்காணல் மற்றும் சான்றிதழ் சரிபார்ப்பில் கலந்துகொள்ளும்போது பயணப்படி வழங்கப்படமாட்டாது.
7. தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகத்தேர்வு நடைபெறும் இடம் மற்றும் தேதி குறித்து அழைப்புக்கடிதம் (Call Letter) அனுப்பப்படும்.
8. காலதாமதமாக வரும் விண்ணப்பங்கள் எக்காரணம் கொண்டும் பரிசீலக்கப்படமாட்டாது.
9. எந்த ஒரு விண்ணப்பத்தையும் நிராகரிக்கும் அதிகாரம் ஆணையாளருக்கு உண்டு.
10. ஒவ்வொரு பணியிடத்திற்கும் தனித்தனியாக விண்ணப்பிக்க வேண்டும்.

தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் www.sivaganga.nic.in என்ற இணையதளத்தில் உள்ள மாதிரி விண்ணப்பத்தினை பதிவிறக்கம் செய்து, பூர்த்திசெய்து அனுப்ப வேண்டும்.

3/3/20

ஆணையாளர்,
ஊராட்சி ஒன்றியம்,
சிவகங்கை

3/3/2020